TNJR

முதல் இடைப் பருவ பொதுத்தேர்வு - 2019

பத்தாம் வகுப்பு

Reg. No.

நேரம் : 1.30 மணி

தமிழ்

மதிப்பெண் - 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 x 1 = 4

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பிடும் பயிர்வகை?
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. பாடு இமிழ் பனிக்கடல் பருகி - என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
அ) கடல்நீர் ஆவியாதல் ஆ) கடல்நீர் குளிச்சியாதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. கூற்று–1 கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் எனப்படுகிறது
கூற்று - 2 தெற்கிலிருந்து வீசும் காற்று இதமான இயல்பு உடையது
அ) கூற்று 1,2 தவறு ஆ) கூற்று 1,2 சரி
இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

4. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெரும் முறையே
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**II. பொருத்துக** 4 x ½ = 2

| | | | |
|---|---|---|---|
| 5. | அ) குரல் | - | 1. மூங்கில் 4 |
| 6. | ஆ) தாழ் | - | 2. இளம்பாக்கு 3 |
| 7. | இ) நுழாய் | - | 3. நெற்கதிர் 1 |
| 8. | ஈ) குருத்து | - | 4. புளியன்விதை 2 |

**III. சுருக்கமான விடையளி** 4 x 1 = 4

9. ஆழியில் சங்கங்கள் வாழும் - கோடிட்ட சொற்களுக்குப் பதிலாகப் புதிய சொற்களை மாற்றி எழுதுக.

10. ஒன்பான்சுவை - எண்ணுப்பெயர் எழுதி, தமிழ் எண் எழுதுக.

11. படகு - புதிரை எழுதுக

12. உலகின் மிகச் சிறிய தவளை என்ற நூலை எழுதியர் ..................

**IV. எவையேனும் ஐந்தனுக்குச் சுருக்கமாக விடையளி** 5 x 2 = 10

13. மன்னும் சிலம்பே! மணிமே கலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழத்துவமே! - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர, எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

14. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?

15. மக்களின் மதிநுட்பமும் பண்பாடும் யாது?

16. வசன கவிதை - குறிப்பு வரைக.

17. விகுதி பெற்ற தொழிற்பெயர்களை அட்டவணைப்படுத்துக.
18. மாஅல் - பொருளும் இலக்கணமும் தருக. — திருமால் - செய்யுளிசை அளபெடை
19. ஆர்கலி - பொருள் எழுதி தொடரில் அமைக்க

## V. எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமாக விடையளி. 2 x 4 = 8

20. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழிதல் பாங்கினை விளக்குக.
21. கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் - குறிப்பு வரைக
22. யானைப்பாகன் - இதன் தொகைநிலைத் தொடர் வகையை விளக்குக.

## VI. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி 1 x 5 = 5

23. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விரித்து எழுதுக.
24. தமிழ்ச்சொல்வளம் பாடத்திலிருந்து பயிர்வகைச் சொற்கள் இரண்டினை எழுதுக.

## VII. உரைப்பத்தியைப் படித்து விடையளி 2 x 1 = 2

25. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும் பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும் மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

1. பாதிரிப் பூ எதற்குத் தன் மணத்தை ஏற்றும்?
2. மூங்கில் அரிசி எவ்வாறு உருவாகிறது?

## VIII. பாநயம் எழுதுக. (எதுகை, மோனை, இயைபு மட்டும்) 3

26. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே

## IX. மொழி பெயர்க்க 2

27. Language is the road map of culture . It tells you where its people come from and where they are going.

## X. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி 5

28. இலைகளின் சலசலப்பு - பறவைகளின் சிறகடிப்பு - அழகான ஆறு - உருண்ட கூழாங்கற்கள் இயற்கையின் கண்காட்சி - இக்குறிப்பைக் கொண்டு நிகழ்வு அல்லது கதையை எழுதுக.
29. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி பாடும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
30. மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

## XI. அடிமாறாமல் எழுதுக 5

31. சிறுதாம்பு எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

SHOT ON REDMI NOTE 7
MI DUAL CAMERA

Padasalai - 10 ஆம் வகுப்பு - தமிழ் ( புதிய பாடத்திட்டம் )
முதல் இடைப் பருவத் தேர் வு - 2019 தஞ்சாவூர் மாவட்டம் .
விடைக்குறி ப்பு :

1) ஆ மணிவகை
2) அ கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
3) ஆ கூற் று 1 ,2 சரி
4) ஈ) பாடல் , கேட்டவர் .
பொருத்துக .
5) நெற்க திர்
6) புளியின் வித்து
7) இளம்பாக்கு
8) மூ ங்கில் .

9) கடலில் மீன்கள் வாழும் .
10) 9 - கூ
11) கடலில் நீந்துவேன் மீன் அல்ல
12) எஸ். இராமகிருஷ்ணன் .

13) சீவக சிந்தாமணி , குண் டலகேசி, வளையாபதி
14) ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ ? முடியாதோ எனஐயம் கொண்டபெண்கள் , மக்கள் நடமாட்டம் குறைவானபகுதியில் போய் தெய்வத்தை த் தொழுது அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர் . அவர்கள் நல்ல சொல் கூறின தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக்கூறின் தீயதாய் முடியும் என்றும் கொள்வர் .
15) பொருளைக் கூ ர்ந்து நோக்கி நுண் பாகுபாடு செய்து அவற்றிற்கேற்ப ப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது .
16) உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதைவடிவம் வசனகவிதை இது தமிழில் பாரதியாரா ல் அறிமுகப்படுத்தப்பட்டது .
17) நட - தல் - நடத்தல்
வாழ் - கை வாழ் க்கை
ஆள் - அல் - ஆளல்
18) பொருள் - திருமால்
செய்யுளிசை அளபெடை
19) ஆர்கலி - கடல்
மூ ன்று பக்கம் கடலால் சூழப்பட்டது நம் நாடு .

20) தமிழ் :
இயல், இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது ; ஐம்பெருங்காப் பியங்களை அணிகலன்களாகப் பெற்றது . சங்கப்

பலகையில் அமர்ந் திருந்த புலவர்களால் காக்கப்பட்டது .

கடல் :

முத்து , அமிழ்தி னைத் தருகிறது .மூன்று வகையான சங்குகளைத் தருகிறது . மிகு தியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக் கிறது . தன் அலையால் சங்கினைத் தடுத்துக் காக்கிற து .

21) கிரேக்க அறிஞர் - பருவக்காற்றின் பயனைஉலகிற்கு உணர்த்தியவர் - பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர் .

22) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளைவிளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது.

23) அகன்ற உலகை வளைத்துப் பெருமழை பொழிகிறது . வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடைய திருமால் , குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது , மண்ணுக்கும் விண்ணுக்குமா கப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம் . அம்மேகம் , ஒலிக்கும் கடலின் குளிர் நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து , மலையைச் சூழ்ந்து , விரைந்த வேகத்துடன் பெருமழையைப்பொழிகிறது .

24) இளம் பயிர் வகைநாற்று - நெல் , கத்தரி

கன்று - மா, புளி , வாழை

குருத்து - வாழை பிள்ளை - தென்னைகுட்டி - விளா

மடலி - பனைபைங்கூழ் - நெல் , சோளம்

25) 1. குடிநீருக்கு

2. மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிரு ந்து அரிசி தோன்றும் .

26) தேனினும்

இனிய னி - எதுகை

தேனினும்

தென்னாடு தே, தெ - மோனை

மொழியே

மொழியே இயைபு

27) மொழியானது பண்பா ட்டுப் பாதையைக்காட்டும் வரைபடமாகும் . மொழி மனிதன் எங்கிரு ந்து வந்தான் , எங்கே செல்கிறான் என்பதையும் காட்டிவிடும் .

28) பொருத்தமான கதைஎழுதியிருப்பின் மதிப்பெண்

29) புயலிலே ஒரு தோணி

மேகப்பொதி கள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நிற்கின்றன .
சூறாவளி மாரியும் காற்றும் கூடி க்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன .
அலைகள்எண்ணெய்பூசியவை போல்மொழுமொழுவென்றுநெளிந்தன .
இருட்டிருட்டு , கும்மிருட்டு , குருட்டிருட் டு .
எலு ம்புகள் முறிவதுபோல் நொறுநொறுநெறுங்கள் ஒலி.

30) வாழ்த்து மடல்:
அன்புள்ள நண்பனுக்கு ,
மரம் இயற்கையின் வரம் - எனும் கட்டுரையின் சி றப்பினைப் பாராட்டுதல் .
இப்படிக்கு ,

உறைமேல்முகவரி :

31) முல்லைப்பாட்டு :
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல்நோக்கி , ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர்பின்நின்று உய்த்தர
இன்னேவருகுவர் , தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் .

தயாரிப்பு :
எஸ். ஜெயசெல்வன், ப.ஆ
தி .ஆமேனிலைப்பள் ளி
திருவிடைமருதூர்
9443740120.